**WANTED**
**ACCOUNTING STAFF**
Male / Female | Age 25-45
Any Degree Tally, Accounting & Computer knowledge
Good Communication English skills
CHROMEPET
91766 32018



# GST ROAD NEWS
Email:gstroadnews@gmail.com
## TAMBARAM
Weekly News Paper
www.gstroadnews.com
Chitlapakkam, Tambaram West, Tambaram East, Sanitorium, Kadapperi, Venkatraman Nagar, Nehru Nagar, Mahalakshmi Nagar, Servamangala Nagar
Vol:13 Issue - 40 | 25 Jan 2026 - 31 Jan 2026 | 4 Pages - Free Circulation | Ct: 99628 80902



**SELVALAKSHMI**
MASTER OF CONSISTENCY
CONSTRUCTION & DEVELOPERS
YOUR DREAM HOMES START SQFT 2,200 ONLY
OUR SERVICES
STRUCTURE; RC FRAMED STRUCTURE
BASEMENT HEIGHT; 3FEET FLYASH BRICK
DOOR; STEAL DOOR/ SINGLE LEAF TEAK WOODEN
WINDOW; UPVC WINDOW AND MS GRILS
TILES; 4*2 HALL,2*2ROOMS
94869 05333



**PAAVAYEE BUILDERS**
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
NEW PROJECT

FLATS @ CHROMPET
JESUPATHAM ST, RADHA NAGAR
LUXURIOUS - 3 BHK
CUSTOMISATION AVAILABLE
✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Metro Water ✓ Video Door
NO WATER LOGGING
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223



**FLATS FOR SALE**
@Chitlapakkam
Plot No: 7B Gandhi Nagar Extention
Between Muthallaman Temple and Rosily School
Single Bedroom 49 L* Double Bedroom 73 L*
SRI VIGNA CONSTRUCTION
98844 21959
98403 77799



**LUXURY FLATS FOR SALE**

@CHROMPET
RADHA NAGAR
"SRI KRISHNA NIVAS"
4 BHK
2082 Sqft
PROJECT FEATURES
☑ Power Backup for all Flats and Common Area ☑ Video Door Access Control
☑ False Ceiling with LED Lights & Fan, Cot, AC ☑ CCTV Automatic LIFT
☑ Wooden Wardrobes ☑ EV Charging Point ☑ Fully Furnished
☑ Modular Kitchen ☑ CCP ☑ Jaquar Fittings
Land Owners Interested in Joint Venture or outright Please Contact us
No:16, D No: 32,Jesupatham Street,Radha Nagar,Chrompet,Chennai-600 044
Cauvery Foundations 98405 76000



**FLATS FOR SALE @CHROMEPET**
2nd STREET BHUVANESWARI NAGAR
3BHK
With Lift & Car Parking

HUNCH LifeSpaces
Civil Engineers • Flat Promoters • Contractors
98400 73611



**3 BHK INDEPENDENT DUPLEX HOUSE**
FOR SALE@ CHROMPET
Site Address :
Hasthinapuram, Saraswathi Nagar
Nr. Thirumalai Nagar, Zion School
3 BHK
As per Vasthu, CCP, Loan Arranged

MANICKAM CONSTRUCTION
Off.Address: Plot No.37, 7th Main Road, Vinobaji Nagar, Hasthinapuram, Chennai - 64.
94442 14382 / 94442 55004



**More than Travel, it's Joy In Life!**
- Flight Bookings.
- International & Domestic Groups.
- Customised Holiday Packages.
- Honeymoon Packages.
- Passport Services.
- Visa Services & Assistance.
- Cruise Bookings.
- Forex.
- Train Bookings.
- Temple Visits.
- Adventures Trip.
- Car & Bus Rentals.
- Event Management.
- College Group Tours.
- Auto Bookings.

joy in life TOURS and TRAVELS

97455 34567
info@joyinlife.in
No : 32/18, Nellipetai Street, Zamin Royapet, Chrompet, Chennai - 600044




ONLY ONE FLAT is AVAILABLE
**FLATS FOR SALE**
CHROMEPET
HASTHINAPURAM
AGS COLONY
Nr Hasthinapuram Bus Stand
2 BHK-780 Sqft (Each Floors)
READY TO MOVE
Rs. 55 LAKHS ONLY
ALL INCLUSIVE
✓ 100% Vasthu ✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Loan Arranged ✓ No Water Logging
✓ Hall False Ceiling
NANDHA FOUNDATIONS PVT LTD
98401 07534 / 98412 17499



**PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET**

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
24 HRS POWER BACKUP*
NEW Projects

4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

BALAJI NAGAR
Nr. PURUSHOTHAMAN NGR PERUMAL TEMPLE
24 HRS POWER BACKUP*
NEW Projects

4 BHK - 1710 Sqft
2 BHK - 867 & 843 Sqft


BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects

24 HRS POWER BACKUP*
3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Ev Charger Point
AUTOMATIC WATER TANK LEVELLER
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD | HDFC BANK | SBI

# எருக்க இலை; ரத சப்தமி; பீஷ்மாஷ்டமி; தர்ப்பணம்! ஏழு ஜென்ம பாவம் போக்கும் புண்ணிய நாள்



ரத சப்தமி நன்னாளில், ஏழு எருக்கம் இலைகள், அட்சதை, அருகம்புல், பசுஞ்சாணம் முதலானவற்றைக் கொண்டு நீராடவேண்டும் என்கிறது சாஸ்திரம். இப்படி நீராடினால், சகல தோஷங்களும் நீங்கும். துர்தேவதைகள் நம்மை அண்டாது. தேக ஆரோக்கியத்துடனும் மனத் தெளிவுடனும் வாழலாம். நம் பாவங்களெல்லாம் தொலையும், புண்ணியங்கள் பெருகும் என்கின்றன ஞானநூல்கள். மேலும் இது பீஷ்மர் சம்பந்தப்பட்டது என விவரிக்கிறது புராணம்.மகாபாரத யுத்தத்தில் வீழ்ந்தார் பீஷ்மர். ஆனாலும் புண்ணியங்கள் நிறைந்த உத்தராயன புண்ய காலத்தில் இறந்தால் புண்ணியம் என மரணத்துக்காகக் காத்திருந்தார். அப்படி காத்திருக்கும் வரத்தை, அதாவது நினைத்த நாளில் இறந்து போகிற வரத்தைப் பெற்றிருந்தார் பீஷ்மர். ஆனால், செய்த பாவங்கள் அவரை தடுத்துக் கொண்டே வந்தன. முக்கியமாக, சபையில், அத்தனை பேருக்கு நடுவே பாஞ்சாலி மானபங்கப்படுத்தப்பட்டாள். அப்போது, அதைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த பாவம்தான் இப்போது சாக விடாமல் தடுத்துக்கொண்டே இருக்கிறது என்பதை வேதவியாசர், பீஷ்மரிடம் விவரித்தார். தவறு செய்வது மட்டுமே பாவமல்ல; தவறைத் தட்டிக் கேட்காமல் பார்த்துக் கொண்டு நிற்பதும் கூட பாவம்தான் என்றார் வியாசர். அத்துடன் பரிகாரம் ஒன்றையும் சொன்னார். அதன்படி, புத்தியால் செய்த பாவம் நீங்க தலையில் ஒரு எருக்கம் இலை, கண்களால் செய்த பாவம் நீங்க, கண்களில் இரண்டு எருக்கம் இலைகள், தோள்களுக்கு இரண்டு, கால்களுக்கு இரண்டு என எருக்கம் இலைகளை வைக்க அருளினார் வியாசர். அம்புப்படுக்கையில் இருந்த பீஷ்மருக்கு அவ்வாறு எருக்க இலைகள் வைக்கப்பட்டன. சூரிய உதயத்தின் போது, உயிர் பிரிந்தது என்கிறது புராணம். இன்று ரதசப்தமி (25.1.26 ஞாயிற்றுக்கிழமை). ரதசப்தமிக்கு மறுநாள் பீஷ்மாஷ்டமி (26.1.26). ரத சப்தமி வழிபாட்டுடன் மறுநாள் பீஷ்மாஷ்டமியும் கொண்டாடப்படுகிறது. வணங்கப்படுகிறது. ரதசப்தமியில் எருக்க இலை கொண்டு நீராடுவதும் மறுநாள் பீஷ்டாஷ்மியில் அவருக்காக தர்ப்பணம் செய்வதும் குருவருளையும் இறையருளையும் தந்தருளும் என்பது உறுதி!

# தை கிருத்திகையில் சிறப்பு வழிபாடுகளும் பலன்களும் !!

சூரியனின் தேர்ப்பாதை வடதிசையில் மாறும் உத்தராயண காலத்தின் ஆரம்பமே தை மாத முதல் நாள். இது மிகவும் புண்ணியமான காலம் என்று புராணங்கள் சொல்கின்றன.தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை அளிக்கும் தை மாதத்தில் மக்கள் தைப்பூசம், தை அமாவாசை, ரத சப்தமி போன்ற விழாக்களையும், பைரவ வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு, தை வெள்ளி வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகளையும் இம்மாதத்தில் பின்பற்றுகின்றனர்.தை மாதத்தில் வரும் கிருத்திகையில் விரதமிருந்து கந்தவேளை வணங்கி வழிபாடு செய்தால் நிச்சயம் திருமணத்தடை நீங்கம் என்பது ஐதீகம். சஷ்டி திதி முருகனுக்கு உகந்தது. சஷ்டி விரதம் சக்தி வாய்ந்தது. அதுபோல 27 நட்சத்திரங்களில் கார்த்திகை நட்சத்திரம் முருகப் பெருமானுக்கு உகந்த நட்சத்திரம்.மாதம்தோறும் வரும் கிருத்திகை நட்சத்திரம் சிறப்பானது. கார்த்திகைப் பெண்களை சிறப்பிக்கும் வண்ணம் கிருத்திகை விழா கொண்டாடப்படுகிறது. ஆண்டுக்கு மூன்று கார்த்திகை தினங்கள் அதீத முக்கியத்துவம் பெறும். அவை, உத்தராயன துவக்கமான தை மாதம் வரும் தை கிருத்திகை, கார்த்திகை மாதம் வரும் பெரிய கிருத்திகை மற்றும் தட்சிணாயன துவக்கமான ஆடி மாதத்தில் வரும் ஆடிக் கிருத்திகை. சித்திரை முதலாகத் தொடங்கும் பன்னிரு மாதங்களில் பத்தாவது மாதமாக மலர்வது ‘தை’ மாதம். பத்து மாதம் கருவுற்று, பிள்ளைச் செல்வம் பெற வேண்டிய பெண்மணிகள், பத்தாவது மாதமான தை கிருத்திகையில் முருகனை மனமார நினைத்து விரதம் இருந்து வழிபட்டால், அவர்களின் மூடிய கருப்பை திறக்கும்; கட்டாயம் குழந்தையும் பிறக்கும். எனவே இந்த தைக் கிருத்திகை தினத்தில் விரதமிருந்து கந்தவேளை



வணங்க அனைத்து கவலைகள், பிரச்சனைகள், தொல்லை, தொந்தரவுகள் நீங்கி வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும்.

# வாராகியை ஏன் இரவு நேரத்தில் வழிபாடு செய்ய வேண்டும்?

வாராகியை இரவு நேர நாயகி என குறிப்பிட்டு இருந்தேன். இதன் சூட்சமம் சொல்கிறேன். அன்னையானவள் இந்த உலகில் தீய சக்திகளிடமிருந்து நம்மை காத்தருளவே அவதரித்தவள். எதிரி ஏவிவிடும் தீய ஆற்றலை அழிக்கவே உருவெடுத்தவள். இந்த தீய சக்தி எனும் பேய், பிசாசு, ஏவல், பில்லி இவை அனைத்திற்கும் வலிமை கூடும் நேரம் இரவு நேரம் தான். இந்த காலகட்டத்தில் தான் இந்த தீயவினைகளை மாந்திரீகன் எனும் சத்ரு ஏவி விடுவான். அப்போது நம்மை காக்க ஒரு சக்தி வேண்டும் அல்லவா? இதை தடுக்க ஒரு மாபெரும் ஆற்றல் வேண்டும் அல்லவா? அந்த மாபெரும் ஆற்றல் கொண்டவள் தான் வாராகி, மாந்திரீகம், ஏவல், பேய் பிசாசுகளிடமிருந்து நம்மை காக்கும் வலிமையான தெய்வம் இந்த பிரபஞ்சத்தில் வேறு தெய்வம் ஏதும் இல்லை என்பது தான் உண்மை. ஏவல், பில்லி சூனியம், யாவையும் தவிடு பொடியாக்கிடவே கையில் உலக்கை வைத்திருக்கிறாள். வாராகி என்ற பெயர் சொன்னாலே இவையாவும் ஓடி ஒளிந்து கொள்ளும், வாராகி வழிபாடு செய்பவர்களை இந்த கெட்ட சக்தி என்றைக்குமே நெறுங்காது. ஆக இந்த கெட்ட துர்சக்திகளிடமிருந்து நம்மை விழுந்துகாக்கதான் அன்னைக்கு நாம் இரவு நேர வழிபாடுகளை செய்ய வேண்டும்.



“வீற்றிருப்பாள் நவ கோணத்தில் நம்மை வேண்டும் என்று காத்திருப்பாள் கலி வந்தனுகாமல் என் கண் கலக்கம் பார்த்திருப்பாள் அல்லள் எங்கே என்றகுச பாசம் கையில் கோத்திருப்பாள் இவளே என்னை ஆளும் குல தெய்வம்” என்கிறது வாராகி மாலை 9 வடிவங்களில் வீற்றிருந்து காத்து வருபவளாம் அன்னை கலி என்ற ஒன்று நம்மை நெறுங்காமல் பார்த்து இருப்ப அல்லள் எங்கே நடக்கிறது. என்று இரவு பகலாக, கண்விழித்து காத்து கொண்டு தன் பக்தனை பாதுகாப்பவளாம். இந்த பாதுகாப்பிற்கு தானே நாம் ஆயிரம் ஆலயம் செல்கின்றோம், இவள் ஒருவரை சரணடைந்தால் நாம் அனைத்து தொல்லைகளிலிருந்தும், விடுபடுகின்றோம் என்பது புலப்படுகிறது அல்லவா. ஜோதிடப்படி இரவு நேர வழிபாட்டின் சூட்சமம் ஜோதிடத்தில் இரவுக்கு அதிபதி சனி கருப்பு இருட்டு, புதர், எல்லாம் சனி ஆதிக்கம் செய்யும் இடமாகும், நவகிரகங்களிலே இவர் ‘கர்மகாரகன்’ என்று அழைக்கப்படுகிறான். நீதிமதான் இவனே செய்த தவறுக்கு பாரபச்சமின்றி தண்டனை வழங்குபவன். மக்கள் அலறி ஓடுவது எல்லாம் 7 என்ற இவர் காலம் வரும் போது தான். இவர் பார்வையில் இருந்து யாரும் அவ்வளவு எளிதில் தப்ப இயலாது. ஒரு வனை கோட்டையிலிருந்து குடிசைக்கு கொண்டு வரும் பார்வை வலிமை சனிபகவானுக்கு உரியது. ஈசன் முதல் சகல தேவர்களையும் ஆட்டி வைத்த வரலாறு இவருக்கு உண்டு, இவர் கட்டுப்பட்டு நிற்கும் ஒரே கடவுள் வாராகி மட்டுமே. வாராகி பக்தனை ஒரு போதும் சனிபகவான் நெறுங்குவதே கிடையாது ஏனெனில் கரிய நிறம், எருமை, இதன் எல்லாம் சனி ஆதிக்கம், ஆகவே இவர் ‘ஆயுள்காரகன்” என்று அழைக்கப்படுகிறான். இதன் காரணத்தினாலே ஆயுள் முடிக்கும் இறைவன் எமதர்மன் எருமையை வாகனமாக வைத்துள்ளார்.

இந்த எருமையையே வாகனமாக கொண்டு அவதரித்தவள் இந்த வாராகி , தேவர் மூவர் யாவரும் அடிபணிந்து வணங்க தக்க தெய்வ வடிவானவள் இவளை வணங்கும் யாரையும் சனி பகவான் நிச்சயம் தீண்டமாட்டார் என்பது முற்றி லும் உண்மை, வணங்கி பாருங்கள் அனுபவத்தால் உணர்வீர்கள்.

# அஸ்தினாபுரம் நவபாஷாண ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோயிலில் 11ஆண்டு தைப்பூச திருவிழா.

குரோம்பேட்டை அஸ்தினாபுரம் வடக்கு மசூதி தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு நவபாஷாண ஸ்ரீ தண்டாயுதபாணி திருக்கோவிலில் 11ஆண்டு தைப்பூச திருவிழா நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு 30–1–26, 31, 01–02–26ஆம் தேதி ஆகிய மூன்று தினங்களில் ஹோமங்கள் சிறப்பு அபிஷேகங்கள் சிறப்பு அலங்காரங்கள் நடைபெறஉள்ளது. தைப்பூச தினத்தன்று ஹோமங்களுக்கு பின் பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல், மற்றும் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், ராஜ அலங்காரம், மகா தீபாதாரணை அதைத் தொடர்ந்து சமபந்தி போஜனமும் நடைபெறஉள்ளது. அன்றைய தினம் இரவு 7.30 மணி அளவில் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி திருவிதி உலா நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு நவபாஷாண தண்டாயுதபாணி அருள் பெறுமாறு ஆலய நிர்வாகிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். தொடர்பு : 9841659593

# தைப்பூசம் சிறப்பு ரயில்கள் இயக்கம்!

பிப்ரவரி 1 அன்று பழனியில் தைப்பூச விழாவையொட்டி மதுரை சந்திப்புக்கும் பழனிக்கும் இடையே முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன.ரயில் எண் 06145: மதுரை சந்திப்பு பழனி முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரயில் 01.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 06.00 மணிக்கு மதுரை சந்திப்பிலிருந்து புறப்பட்டு அதே நாளில் காலை 08.30 மணிக்கு பழனியை வந்தடையும். மறுமார்க்கமாக ரயில் எண். 06146: பழனி மதுரை சந்திப்பு முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரயில் 01.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று பிற்பகல் 2.25 மணிக்கு பழனியில் இருந்து புறப்பட்டு அதே நாளில் மாலை 5.00 மணிக்கு மதுரை சந்திப்பை வந்தடையும்.இந்த ரயில்கள் சோழவந்தான், கொடைக்கானல் சாலை, அம்பதுரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் நிற்கும்.

# CLASSIFIEDS


## PLOT SALE

MADURANTAGAM
NR.HIGHWAY/ NH-45
1 to 1 1/2 ACRE
DRY LAND SALE
@WEST TAMBARAM
ROYAPPA NAGAR
30X80 - 2400 Sqft
DTCP PLOT ON 60 FEET RD
99401 35052

## RENTAL

IND.HOUSE FOR RENT- FIRST FLOOR
@ PALLAVARAM CLOSE TO
AIRPORT& RAILWAY STATION
4BHK AC,CP,
CCTV-GARDEN ,TV NET
99405 07235

COMMERCIAL
SPACE FOR RENT
@ TAMBARAM
PRIME LOCATION
89396 99755

FLAT FOR RENT
@ CHROMPET, NAGAPPA NAGAR
Nr. SCHOOL & COLLEGES
2 BHK
SECOND FLOOR, WEST FACING
CAR PARKING,WITH LIFT
95001 96316

FLAT FOR RENT
@ ANAKAPUTHUR
4th STREET GURUSAMY NAGAR
2BHK-700 sqft
CCP, One 2 Wheeler Parking
neatly white washed
Preferably Veg
99529 66972

## NEW FLAT SALE

NEW FLATS FOR SALE
@CHROMPET
PATEL STREET- NEHRU NAGAR
NEARER TO RAILWAY
STATIONS & BUS STOP
3 BHK IN FIRST FLOOR
& CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs.525 /-(Colour) மட்டுமே
044 - 22236399 / 89395 26999



DISCLAIMER

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.



FOLLOW
GST ROAD NEWS
ON

## FLAT RESALE

FLAT FOR RESALES
@CHROMPET
@ HASTINAPURAM
3BHK 1075 Sqft
5 YRS OLD, 1st FLOOR
LIFT, CCP
80722 30451

FLAT FOR RESALE
@ CHROMPET
RADHA NAGAR MAIN RD
1BHK - 700 SQFT
UDS - 336 SQFT
FIRST FLOOR
80722 30451

FLAT FOR RESALE
@SIRUSERI
PUDHUPAKKAM MN RD
NR ANNA THIRUMANA MANDAPAM
2BHK-827 Sqft
UDS 530 Sqft
CCP, LIFT, 12 YRS OLD
3RD FLOOR
24HRS SECURITY
MODULAR KITCHEN
87545 49165 / 98404 41311

FLAT FOR RESALE
@CHROMEPET
BHARATHIPURAM, RAVI STREET
2BHK-840 Sqft
UDS-457 Sqft
GROUND FLOOR
2 BIKE PARKING ONLY
Rs.55 L (Nego)
80562 07660

FLAT FOR RESALE
@MARUTHI NAGAR
3BHK- 1888 Sqft
UDS-880 Sqft
IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

FLAT FOR RESALE
@CHROMPET
PADMANABHAN NAGAR
NR-KARUMARI AMMAN TEMPLE
2BHK-897 sqft
UDS-349 sqft
2 floor, Lift, CCP,
Video Door,Two Year Old
Modular kitchen,
Self fully cupboard
87788 64431 / 97890 52332

FLAT FOR RESALE
@CHROMEPET
LAKSHMIPURAM
2BHK-870 Sqft
2nd Floor
95973 83526
99521 77075

GST ROAD NEWS
FOR ADVERTISMENT
DETAILS CONTACT
89395 26999 / 044-22236399

# இறுதி வடிவம் பெறும் தி.மு.க. கூட்டணி

இறுதி வடிவம் பெற்றுள்ளதாக கூறப்படும் தி.மு.க. கூட்டணியில் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள தொகுதிகளின் விவரம் வருமாறு:–யார் யாருக்கு எத்தனை தொகுதிகள் தி.மு.க. –164, காங்கிரஸ்–25, விடுதலை சிறுத்தைகள் கட்சி–6, ம.தி.மு.க.–6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு–6, இந்திய கம்யூனிஸ்டு – 6, தே.மு.தி.க.–6 (ஒரு ராஜ்யசபா சீட்), பா.ம.க. (ராமதாஸ் அணி) –4, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி–3, மக்கள் நீதி மய்யம்–3, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 3, மனிதநேய மக்கள் கட்சி–2, இதுபோக, தனியரசு, வேல்முருகன், கருணாஸ், ஸ்ரீதர் வாண்டையார் போன்ற தலைவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது.

## டபுள் இன்ஜின் எனும் டப்பா இன்ஜின் ஓடாது: முதல்வர் ஸ்டாலின்.

பிரதமர் சொல்லும் டபுள் இன்ஜின் எனும் டப்பா இன்ஜின் தமிழ்நாட்டில் ஓடாது பாஜக அரசின் தடைகளை தகர்த்தெறிந்துதான் தமிழ்நாடு வரலாறு பேசும் வளர்ச்சியை அடைந்துள்ளது மதுராந்தகம் கூட்டத்தில் தமிழகத்திற்கு டபுள் இன்ஜின் தேவை என்று பிரதமர் மோடி கூறியதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி.

## சென்னையில் இன்று முதல் டபுள் டக்கர் பேருந்து சேவை

சென்னை மாநகரில் இன்று முதல் டபுள் டக்கர் பேருந்து சேவை மீண்டும் அறிமுகம் செய்யப்படுகிறது.டபுள் டக்கர் பேருந்தில் பெரியவர்களுக்கு ரூ.200, சிறியவர்களுக்கு ரூ.150 என கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.தமிழக சுற்றுலாவை மேம்படுத்த ரூ.1.89 கோடியில் வாங்கப்பட்ட டபுள் டக்கர் பேருந்துகள் கடந்த 12ஆம் தேதி அறிமுகம்.

# உருண்டை குழம்பு



தேவையான பொருட்கள்: துவரம் பருப்பு 200 கிராம், சின்ன வெங்காயம் 200 கிராம், சோம்பு 1 ஸ்பூன், மிளகாய்தூள் தேவைக்கேற்ப, மல்லிதூள் தேவைக்கேற்ப, தேங்காய் மூடி 1/2 மூடி, எண்ணெய் தேவைக்கேற்ப, புளி எலுமிச்சை அளவு, பூண்டு 3 பல், தக்காளி 2, உப்பு தேவைக்கேற்ப, வெந்தயம் 1 ஸ்பூன், கறிப்வேப்பில்லை சிறிதளவு

செய்முறை: துவரம் பருப்பு 1 மணி நேரம் ஊரை வைத்து பிறகு தண்ணீரை வடிகட்டி மிக்ஸியில் உப்பு, பூண்டு சேர்த்து வடைக்கு அரைக்கும் பதத்தில் அரைத்துக்கொள்ளவும். சின்ன வெங்காயம், தக்காளி ஆகியவைகளை நறுக்கிக் கொள்ளவும். துருவிய தேங்காயோடு, சோம்பு சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும்.இப்போது அரைத்த பருப்போடு 100 கிராம் நறுக்கிய சின்ன வெங்காயத்தையும் சேர்த்து (முருங்கை கீரையும் சேர்த்துக் கொண்டால் சுவையாக இருக்கும்)பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி இட்லி பானையில் வைத்து அவித்து எடுத்துத் வைத்துக்கொள்ளவும். இப்போது அடுப்பில் பாத்திரத்தை வைத்து காய்ந்ததும் எண்ணெய் ஊற்றி சூடானதும் வெந்தயம், சின்ன வெங்காயம், கறிவேப்பில்லை, தக்காளி ஆகியவைகளை ஒன்றின் பின் ஒன்றாக போட்டு வதக்கவும் பிறகு சிறிது மஞ்சள்தூள் தேவையான மிளகாய்தூள் மல்லித்தூள், உப்பு சேர்த்து கூடவே புளிகரைசலையும் ஊற்றி தேவைக்கேற்ப தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும் இரண்டு கொதி வந்ததும் அவித்துத் வைத்திருக்கும் பருப்பு உருண்டைகளை அதில் போடவும் சிறிது நேரத்திற்கு பிறகு அடுப்பை அணைத்துத் இறக்கவும். சுவையான உருண்டை குழம்பு ரெடி.



முன்னாள் முதல்வர் எம்ஜிஆரின் பிறந்த நாள் விழா ஸ்ரீ சாரதா சக்தி பீடம் பெருங்களத்தூர் ஆசிரமத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மாநில தலைவர் கோ பைகுமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம் எஸ். வெங்கட்ராமன் தலைமை ஏற்றார்.அருகில் மாநில மகளிர் அணி செயலாளர் சுப்புலட்சுமி விளக்கேற்றினார். விழாவில் ராமதாஸ், முருகேஷ், நாராயணன் கலந்து கொண்டனர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர். செல்வகுமார் நன்றி கூறினார்.

# ஓவியப்போட்டி அனுமதி இலவசம்

மாடம்பாக்கம் வேலம்மாள் வித்யாலயா பள்ளியில் குடியரசு தின விழாவை ஒட்டி நாளை 26 ஆம் தேதி பள்ளிகளுக்கு இடையேயான வருடாந்திர ஓவிய போட்டி நடைபெறுகிறது.ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை ஆன 500 மாணவர்கள் இதில் பங்கேற்கலாம் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.காலை 10 மணி முதல் 12 மணி வரை ஓவிய போட்டி நடைபெறும்.ஓவிய போட்டியில் பங்கேற்க அனுமதி இலவசம்.9500107212 / 9789599980.

# சென்னை விமான நிலையம் அருகே சுவரொட்டிகள் அகற்றப்படுமா?

சென்னை விமானம நிலையம் அருகே உள்ளே நுழையும் இடத்தில் மேம்பாலம் உள்ளது. இந்த மேம்பாலத்தில் இருபுறத்திலும் அரசியல் கட்சிகளின் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. சென்னை நகருக்குள் பாலங்களில் சுவரொட்டிகள் ஒட்ட தடை விதிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் விமான நிலைய பாலத்தில் யாரும் அதை அமல்படுத்துவதில்லை. விமானம் மூலம் தமிழகத்திற்கு வரும் வெளிநாட்டு பயணிகள் இதுபோன்று அசிங்கமாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருப்பதை பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்று கேள்வி எழுந்துள்ளது சுவரொட்டி ஒட்டுவதை தடுக்க மாநகராட்சியும் உள்ளூர் போக்குவரத்து போலீசாரும் எந்த நடவடிக்கையும் எடுத்தது போல் தெரியவில்லை.

# 3ஆவது பிரசவத்திற்கும் விடுப்பு

பெண் ஊழியர்களின் 3ஆவது பிரசவத்திற்கும் சம்பளத்துடன் கூடிய பேறுகால விடுப்பு வழங்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் மீண்டும் உத்தரவு.உயர்நீதிமன்றத்தில் பணியாற்றும் பி.மங்கையர்கரசி என்பவர் தொடர்ந்த வழக்கில் இரு நீதிபதிகள் அமர்வு உத்தரவு.அனைத்து துறை செயலாளர்களுக்கும் இந்த உத்தரவு நகலை அனுப்பவும் நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.





தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 சிட்லபாக்கம் 43வது வார்டு பகுதிகளில் கருணாநிதி குறுக்கு தெரு மற்றும் ரோஸ்லி நகர் புதிதாக கட்டப்பட்டு வரும் கால்வாய்கள், திருமுருகன் சாலை, காகபுஜன்டர் தெரு, ஜகஜீவன்ராம் தெரு, கல்யாணசுந்தரம் தெரு, நிஷா அவென்யூ மற்றும் கலைவானர் சாலை ஆகிய தெருக்களின் புதிதாக கட்டப்பட்டு வரும் தரை பாலம் பணியை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.ராஜா அவர்களின் அறிவுறுத்தலின்படி தாம்பரம் மாநகராட்சியின் பணிகள் குழு உறுப்பினரும் மாமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் சி.ஜெகன் அவர்கள் பொறியாளர் மற்றும் ஒப்பந்ததாரருடன் ஆய்வு செய்த பொழுது எடுத்தபடம்.

வேதா பால்
VETHAA milk
எங்களிடம் தினமும் காலை வேதா புதிய பால் விநியோகம் செய்யபடும். கேட்டரிங் – கடைகளுக்கு சிறப்பு விலையில் கிடைக்கும்
தூய்மையானது சுவையானது ஆரோக்கியமானது
டோர் டெலிவரி செய்யப்படும்
SHRI HARI TRADERS
Plot No:16B/17, A1, Krishna Nager
3rd Main Road, 1st Cross Street, Chromepet, Chennai-44.
95000 04140 / 97899 03355

WE INVITES LAND OWNERS FOR A PROFITABLE JOINT VENTURE
NO BROKERAGE FROM LAND OWNERS
AL-MUJEEB REALTORS
89390 60970

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள பிரபல நிறுவனத்திற்கு Retd, SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 30 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

KR HOMES
ENGINEER & CONTRACTOR
★ CONSTRUCTION
★ ARCHITECTURAL PLANS
★ APPROVALS
★ RENOVATION
★ LABOUR CONTRACT
80724 99969

WANTED @CHROMEPET NEW COLONY
OFFICE STAFF (Male/Female)with Computer knowledge for Engineer's office
sriguruconsultants09@gmail.com
90255 54677

# பெண்கள் செய்யக்கூடிய எளிமையான உடற்பயிற்சிகள்...

உடற்பயிற்சி என்பது எல்லோருக்குமே முக்கியம்.அப்போது தான் ஆரோக்கியம், உடல் கட்டுக்கோப்பை காக்க முடியும், சுறுசுறுப்பாகவும் இருக்க முடியும். அதிலும், குடும்பத்தின் முதுகெலும்பாய் உள்ள பெண்கள், அன்றாடம் அவசியம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். ஆனால், வீட்டு வேலை, வெளி வேலை என்று எப்போதும் ஓடிக் கொண்டே இருக்கும் அவர்கள், உடற்பயிற்சி செய்ய தங்களுக்கு நேரமில்லை என்கிறார்கள். அப்படி நேரமில்லாத பெண்கள், குறைந் தபட்சம் 2 பயிற்சிகளாவது செய்வது நல்லது. ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தினமும் 30 நிமிடங்களேனும் ஏதேனும் உடல் செயல்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்று பரிந்துரைக் கப்படுகிறது. வாராந்திர பழக்கமாக 2 பயிற்சிகளை பெண்கள் மேற்கொள்வது, அவர்களுடைய ஆரோக்கியத் துக்கு உதவும். அந்த பயிற்சிகள் பற்றி...

### நடைபயிற்சி

நடைபயிற்சி என்பது நம்மை நகர்த்தும் எளிமையான பயிற்சியாகும். உட்கார்ந்த வாழ்க்கை முறையை கொண்டவராக இருந்தால் அதை மாற்றுவதற்கும், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் நடைபயிற்சி சிறந்த தேர்வாகும். பரபரப்பான நாட்களிலும், நடப்பதற்கு நேரத்தை ஒதுக்குவது மனதை அமைதியாகவும் இலகுவாகவும் உணரச் செய்யும்.ஒரு வாரத்தில் குறைந்த பட்சம் 3 மணி நேரம் நடைபயிற்சி செய்வது நல்லது. இந்த 3 மணி நேரத்தை 45 நிமிடங்களாக பிரிக்கலாம். வாரத்தின் 7 நாட்களில் 4 நாட்கள் வேகமான நடைபயிற்சி செய்ய வேண்டும். இது உடலை சுறுசுறுப்பாக வைத்திருப்பதுடன் தசைகளையும் வலிமையாக்கும்.

### எடை தூக்குதல்

பெரும்பாலான பெண்கள், எடை தூக்கும் பயிற்சிகளை தவிர்க்கிறார்கள். இது ஆண்களுக்கானது என பல பெண்களின் எண்ணமாக உள்ளது. ஆனால் எடை தூக்கும் பயிற்சி, பெண்களின் உடலை வலிமையாக்குவதில் முக்கியபபங்காற்றுகிறது. வாரத்தில் 2 முறையாவது எடைகளை தூக்கி பழகவேண்டும். முதலில் குறைந்த எடைகளைத் தூக்கி பயிற்சிகள் செய்ய வேண்டும். பின்னர் படிப்படியாக எடையை அதிகரிக்கலாம். வாரத்தில் 2 முதல் 3 நாட்கள் எடை பயிற்சிகளை செய்யலாம்.பெண்கள் உடற்பயிற்சிக்கு என்று ஒரு மணி நேரம், 2 மணி நேரம் என



ஒதுக்க தேவையில்லை. அவர்கள் தம்முடைய அன்றாட வாழ்க்கையில் காலையில் 10 நிமிடங்கள், மதியம் 10 நிமிடங்கள், இரவில் 10 நிமிடங்கள் என பிரித்து, மொத்தத்தில் 30 நிமிடங்கள் நடப்பது போதும். வாரத்தில் 2 நாட்களாவது எடைகளுடன் கூடிய பயிற்சியை செய்ய 30 நிமிடங்கள் அல்லது குறைந்த பட்சம் 15 நிமிடங்களை ஒதுக்கலாம். 333 விதியை பின்பற்றலாம். மூன்று வெவ்வேறு பயிற்சிகளை மூன்று செட்டுகள் செய்வதே 333 விதியாகும்.இது பெண்களின் ஆரோக்கியத்தில் மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவரும். தொடக்கத்தில் சற்று கடினமாக இருந்தாலும் இந்த பழக்கத்தை வழக்கமாக்கிக் கொண்டால் மிகவும் எளிதாகி விடும். முடிந்தால் வீட்டிலோ அல்லது பெண்களுக்கு என்று உள்ள உடற்பயிற்சிக் கூடங்க ளிலோ எடைப்பயிற்சிகளை பெண்கள் மேற்கொள்ளலாம்.

# 40 வகை கீரைகளும் அதன் முக்கிய பயன்களும்...

1.அகத்திக்கீரை–இரத்தத்தை சுத்தமாக்கிபித்தத்தை தெளிய வைக்கும். 2. காசினிக்கீரை– சிறு நீரகத்தை நன்கு செயல்பட வைக்கும். உடல் வெப்பத்தை தணிக்கும். 3.சிறுபசலைக்கீரை– சரும நோய்களைத் தீர்க்கும் பால்வினை நோயை குணமாக்கும். 4.பசலைக் கீரை – தசைகளை பல மடையச் செய்யும். 5. கொடி பசலைக் கீரை – வெள்ளை விலக்கும் நீர் கடுப்பை நீக்கும். 6. மஞ்சள் கரிசலை–கல்லீரலை பலமாக்கும். காமாலையை விலக்கும். 7. குப்பை கீரை– பசியைத் தூண்டும். வீக்கம் வத்த வைக்கும். 8. அரைக் கீரை–ஆண்மையை பெருக்கும். 9. புளியங்கீரை– சோகையை விலக்கும், கண் நோய் சரியாக்கும். 10.பிண்ணாருக்குகீரை – வெட்டையை, நீர்கடுப்பை நீக்கும்.11. பரட்டைக்கீரை–பித்தம், கபம் போன்ற நோய்களை விலக்கும். 12. பொன்னாங்கன்னி கீரை– உடல் அழகையும், கண் ஒளியையும் அதிகரி க்கும். 13. சுக்காகீரை– இரத்த அழுத்தத்தை சீர் செய்யும், சிரங்கு மூலத்தை போக்கும். 14. வெள்ளை கரிசலைக் கீரை–



இரத்த சோகையை நீக்கும். 15. முருங்கைக் கீரை – நீரிழிவை நீக்கும், கண்கள், உடல் பலம் பெறும். 16. வல்லாரை கீரை – மூளைக்கு பலம் தரும். 17. முடக்கத்தான் கீரை – கை, கால் முடக்கம் நீக்கும்,வாயு விலகும். 18. புண்ணக்கீரை – சிரங்கும். சீதளமும் விலக்கும். 19. புதினாக்கீரை – இரத்தத்தை சுத்தம் செய்யும், அஜீரணத்தை போக்கும். 20. நஞ்சுமுண்டான் கீரை – விஷம் முறிக்கும். 21. தும்பைகீரைஅசதி, சோம்பல் நீக்கும். 22. முள்ளங்கி கீரை – நீரடைப்பு நீக்கும். 23. பருப்பு கீரை – பித்தம் விலக்கும், உடல் சூட்டை தணிக்கும். 24. புளிச்சகீரை– கல்லீரலை பலமாக்கும், மாலைக்கண் நோயை விலக்கும். ஆண்மை பலம் தரும். 25. மணலிக்கீரை – வாதத்தை விலக்கும். கபத்தை கரைக்கும். 26. மணத்தக்காளி கீரை–வாய் மற்றும் வயிற்றுப்புண் குணமாக்கும். தேமல் போக்கும். 27. முளைக்கீரை – பசியை ஏற்படுத்தும். நரம்பு பலமடையும். 28. சக்கரவர்த்தி கீரை – தாது விருத்தியாகும். 29. வெந்தயக்கீரை – மலச்சிக்கலை நீக்கும், மண்ணீரல், கல்லீரலை பலமாக்கும். வாத, காசநோய்களை விலக்கும். 30. தூதுவலை – ஆண்மை தரும். சரும நோயை விலக்கும், சளித்தொல்லை நீக்கும். 31. தவசிக்கீரை – இருமலை போக்கும். 32. சாணக்கீரை – காயம் ஆற்றும். 33. வெள்ளைக்கீரை – தாய்பாலை பெருக்கும். 34. விழுதிக்கீரை – பசியைத்தூண்டும். 35. கொடி காசினிகீரை – பித்தம் தணிக்கும். 36. துயிளிக்கீரை – வெள்ளை வெட்டை விலக்கும். 37. துத்திக்கீரை – வாய், வயிற்றுப்புண் அகற்றும். வெள்ளை மூலம் விலக்கும். 38.காரகொட்டிக்கீரை – மூல நோயை போக்கும்.சீதபேதியை நிறுத்தும். 39.மூக்கு தட்டை கீரை –சளியை அகற்றும். 40.நருதாளிகீரை – ஆண்மையைப் பெருக்கும், வாய்ப்புண் அகற்றும்.



குரோம்பேட்டை, அஸ்தினாபுரத்தில் வடக்கு மசூதி தெருவில் அமைந்துள்ள, அருள்மிகு நவபாஷாண ஸ்ரீ தண்டா யுதபாணி சுவாமி திருக் கோவிலில், 24 ஆம் தேதி சனிக்கிழமை சுக்ல சஷ்டியை திதியன்று, சத்ரு சம்ஹார ஹோமம் ஆறு சிவாச்சாரியார்களை கொண்டு வெகு விமர்சையாக நடைபெற்றது ஹோமத்திற்கு 6 விதமான புஷ்பங்கள், 6 விதமான சித்ரா அன்னங்கள், 6 விதமான பழ வகைகள், 6 வித மான ஹோம சமித்துக்கள், மற்றும் பசு விராட்டி, நெய், பழ வகைகள் கொண்டு ஹோமம் நடைபெற்றது இதில் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர் விழா ஏற்பாடுகளை ஆலய நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். குறிப்பாக இந்த சுற்று வட்டார பகுதிகளில் நவபாஷன சிலை அமைந்துள்ள திருக்கோயில் இங்கு தான் உள்ளது.



குரோம்பேட்டையில் லயன்ஸ் சங்கம் சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கிய போது எடுத்தபடம். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆளுநர் மணிசேகர், முன்னாள் ஆளுநர் ஏ.டி. ரவிச்சந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் ச. ராஜேந்திரன், வட்டாரத் தலைவர் எம்.ஜெயபால் MJF, ஆர்.காமராஜ் DCP, ஒருங்கிணைப்பாளர் K.M.J.அசோக், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இதற்கு பதில் என்ன? எடப்பாடி கேள்வி

சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் தன் முதுகை தானே தட்டிக்கொண்டு பெருமை பேசி வந்த நேரத்தில், பெரம்பலூரில் மர்ம நபர்கள் நாட்டு வெடிகுண்டுகளை வீசியதில், 4 போலீசார் படுகாயம் அடைந்துள்ளனர்; இதற்கு யார்மீது முதல்வர் பழிபோடப் போகிறார்?அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி

## ஒரே நாளில் இரு முறை உயர்ந்து உச்சத்தை தொட்ட தங்கம் வெள்ளி

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ஒரே நாளில் ரூ.1,600 உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,18,000க்கு விற்பனையாகிறது. தங்கம் விலை சவரனுக்கு காலையில் ரூ.560 உயர்ந்த நிலையில் பிற்பகலில் ரூ.1,040 அதிகரித்துள்ளது. சில்லறை வர்த்தகத்தில் வெள்ளி விலை கிராமுக்கு ஒரே நாளில் ரூ.20 உயர்ந்து ஒரு கிராம் ரூ.365க்கு விற்பனையாகிறது.

## சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு!

ஆளுநர் உரைக்கு பதிலுரை அளிக்க வேண்டிய நான் இன்று ஆளுநருக்கு விளக்கமளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளேன் என்று தெரிவித்தார்.மேலும் திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டங்கள், செய்த சாதனைகளை பட்டியலிட்ட அவர் பகுதிநேர ஆசிரியர்களுக்கு, சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சில அறிவிப்புகளை வெளியிட்டார்.இறுதியாக தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும் என்று கூறி உரையை நிறைவு செய்தார்.இதையடுத்து ஆண்டின் முதல் சட்டப்பேரவை கூட்டத்தொடர் நிறைவு பெற்றது. சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்படுவதாக பேரவைத் தலைவர் அப்பாவு அறிவித்தார்.

## கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

செங்கல்பட்டு, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சியில் இன்று கனமழைக்கு வாய்ப்பு. விழுப்புரம், கடலூர், தஞ்சை, ராமநாதபுரம் மற்றும் புதுவையிலும் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் அறிவித்துள்ளது.

## பிராட்வே பேருந்து நிலையம் இடமாற்றம்!

சென்னை பிராட்வே பேருந்து முனையம் மறுசீரமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற இருக்கிறது. நேற்று 24.01.2026 முதல் பேருந்து நிலையத்திலிருந்து இயக்கப்பட்ட பேருந்துகள் ராயபுரம் மற்றும் தீவுத்திடலில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் பேருந்து முனையத்திலிருந்து இயக்கப்படும்.





## பாஜக கூட்டணி குறித்து காங்கிரஸ் விமர்சனம்!

“அமலாக்கத்துறை மற்றும் வருமான வரித்துறை இரவு பகலாக உழைத்து டி.டி.வி.தினகரன், அன்புமணி ஆகியோரை பா.ஜ.க. கூட்டணிக்குள் கொண்டு வந்துள்ளன. இவர்கள் அனைவரையும் ஒரே மேடையில் அமர வைத்த பெருமை சி.பி.ஐ. அமலாக்கத்துறை, வருமான வரித்துறை இயக்குநர்களேயே சேரும்.NDA கூட்டணி பண அதிகாரம் கொண்டது; தேர்தலில் அது தோற்கடிக்கப்பட வேண்டும்; தேர்தலில் NDA கூட்டணிக்கு 3வது இடமே கிடைக்கும்.”இவ்வாறு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் பேட்டியளித்தார்.

## பகுதி நேர ஆசிரியர்கள் போராட்டம் வாபஸ்!

பகுதிநேர ஆசிரியர்களின் கூட்டியக்க அறிக்கையில் 17 நாட்களாக சென்னை DPIல் நடைபெற்ற பகுதிநேர ஆசிரியர்கள் போராட்டம், முதலமைச்சர், பள்ளிகல்வி அமைச்சர் மற்றும் பள்ளிக்கல்வி உயர் அதிகாரிகள் கொடுத்த உறுதியின்படி, எங்களுக்கு பாதகம் இல்லாத அரசாணை வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தற்காலிகமாக ஒத்திவைக்கின்றோம்.

## ஓட்டை எஞ்ஜின் ஆட்சி: எடப்பாடி பழனிசாமி.

நான்கரை ஆண்டுகளாக ஒரு அடி கூட நகராத, ஒரு ஓடாத ஓட்டை எஞ்ஜின் ஆட்சியை நடத்திவிட்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னிறுத்தும் எங்கள் கூட்டணியைப் பற்றி பேசுவதெல்லாம் வேடிக்கையின் உச்சம் - எடப்பாடி பழனிசாமி பதில்.

## ஓபிஎஸ் உடன் சேகர்பாபு சந்திப்பு

முன்னாள் முதலமைச்சர் கோ பன்னீர்செல்வத்தை இன்று கோட்டையில் சபாநாயகர் அப்பாவு அறையில் அமைச்சர் சேகர்பாபு சந்தித்து பேசினார். ஓபிஎஸ் இந்த தேர்தலில் என்ன முடிவு எடுக்கப் போகிறார் என்று அனைவரும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இந்த சந்திப்பு நடந்துள்ளது.

## நேற்றும் இன்றும் வாக்காளர் சிறப்பு முகாம்..

வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க, திருத்தம் மேற்கொள்ள இன்றும் நாளையும் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன. பெயர் சேர்த்தல், முகவரி மாற்றம், திருத்தம் உள்ளிட்ட பணிகளை முகாம்களில் வாக்காளர்கள் மேற்கொள்ளலாம்.

## விடைபெறுகிறது பாம்பன் பாலம்!

பிப்ரவரி முதல் 108 ஆண்டு கால பழைய பாலத்தை அகற்றும் பணி தீவிரம்.108 ஆண்டுகள் பழமையான பாம்பன் ரயில் பாலத்தின் மையப்பகுதியை அகற்றும் பணி பிப்ரவரியில் தொடங்குகிறது. பாதுகாப்பு கருதி மே 31 வரை பாம்பன் கடல் வழியாக கப்பல் கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.













Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725